*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*26 12 2025 FRIDAY 6 30 PM*
*வணக்கம் - மாநிலச் செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில், இளையோர் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*2. தீவிரவாதத்தை மத்திய அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*3. தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் அடுத்த மாதம் 20ஆம் தேதி தொடங்குகிறது.*

*4. பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்களை கைது செய்துள்ளதற்கு அஇஅதிமுக மற்றும் பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளன.*

*5. உலக Rapid மற்றும் Blitz செஸ் சாம்பியன் போட்டி, தோஹாவில் இன்று தொடங்கியது.*

*>>>>>><<<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில், இளையோர் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். வீர பாலகர் தினத்தை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*இந்நாளையொட்டி வழங்கப்பட்ட தேசிய சிறார் விருதுகளை பெற்ற 20 பேர் படைத்த சாதனைகள் அளப்பரியது என்று அவர் தெரிவித்தார்.*

*அனைத்து துறைகளிலும் இளையோருக்கு ஏராளமான வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*இளையோரின் திறனுக்கு உரிய அங்கீகாரத்தை மத்திய அரசு வழங்கி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*தீவிரவாதத்தை மத்திய அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*தீவிரவாதத்தை ஒடுக்க அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு வலுவான செயல்திட்டத்தை வகுத்து செயலாற்றி வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் அடுத்த மாதம் 20ஆம் தேதி தொடங்குகிறது.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பேரவைத் தலைவர் திரு. அப்பாவு இதனை தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட – அப்பாவு 32 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*ஒப்பந்த செவிலியர்களுக்கு பணிநிரந்தர ஆணைகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்று மட்டும் 169 செவிலியர்களுக்கு பணிநிரந்தர ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். எஞ்சிய 831 செவிலியர்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு முன் பணிஆணைகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*இடைநிலை ஆசிரியர்களுக்கு சம ஊதியம் வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் அதற்காக போராடியவர்களை திமுக அரசு கைது செய்துள்ளது கண்டிக்கத்தக்கது என்று அஇஅதிமுகவும், பிஜேபியும் கூறியுள்ளன.*

*இதுதொடர்பாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசிரியர்கள் மீதான அராஜக போக்கை உடனடியாக கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.*

*சம வேலைக்கு சம ஊதியம் என்ற வாக்குறுதியை அளித்து விட்டு, நான்கரை ஆண்டுகளாக நிறைவேற்றாமல், அவர்களை போராட்டத்திற்கு திமுக அரசு தள்ளியுள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

*பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனும் இந்த கைது சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், வேலைக்கேற்ற ஊதியம் வழங்குவதில் என்ன சிக்கல் என்றும் வினவியுள்ளார்.*

*விளம்பரத்திற்காக அதிக தொகையை செலவிடும் திமுக அரசு, ஊழியர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியத்தை மட்டும் வழங்க மறுப்பது ஏற்புடையதல்ல என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*திரைப்பட தயாரிப்பாளர் புகாரின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட, ஊடகவியலாளர் சவுக்கு சங்கருக்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால ஜாமின் வழங்கியுள்ளது.*

*இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்எம். சுப்பிரமணியம், திரு. தனபால் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.*

*தனிநபர் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில் சவுக்கு சங்கர் மீது வழக்குகள் பதிவு செய்யப்படுவதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.*

*மருத்துவ காரணங்களுக்காக அவருக்கு, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் தேதிவரை இடைக்கால ஜாமின் வழங்கப்படுவதாகவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் தொடர்பான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ளன.*

*திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 301 வாக்குச்சாவடி மையங்களில் காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 5 மணிவரை இந்த முகாம்கள் நடைபெறும் என்று ஆட்சியர் திரு. சரவணன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – சரவணன் 34 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மத்திய அரசின் இலவச சமையல் எரிவாயு இணைப்பு திட்டம், பெண்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*இந்த திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 33 செகண்ட்ஸ்)*

*இந்த திட்டம் தங்களுக்கு சேமிப்பையும் ஏற்படுத்துவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் 25 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே, கிணறு தோண்டும் பணியின்போது, மண் சரிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்தனர்.*

*தனியார் நிலத்தில் கிணறு தோண்டும் போது இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - சரவணன் 32 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*திருவாரூர் மாவட்டத்தில், வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழில் வைக்க வலியுறுத்தி, தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடைபெற்ற பேரணியை ஆட்சியர் திரு. மோகனசந்திரன் இன்று தொடங்கி வைத்தார்.*

*>>>>>><<<<<<*

*மதுரை, கே.கே.நகரில் புதிய ஆதார் சேவை மையத்தை துணை ஆட்சியர் திருமதி. காளீஸ்வரி இன்று திறந்து வைத்தார்.*

*>>>>>><<<<<<*

*விழுப்புரத்தில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் 60க்கும் மேற்பட்டோர் தேர்தெடுக்கப்பட்டனர்.*

*>>>>>><<<<<<*

*அரியலூர் மாவட்டத்தில், ஆட்சியர் திரு. ரத்தினசாமி முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பயன்படுத்தி நடைபெற்ற மாதிரி வாக்குப்பதிவில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.*

*>>>>>><<<<<<*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*உலக Rapid மற்றும் Blitz செஸ் சாம்பியன் போட்டி, தோஹாவில் இன்று தொடங்கியது.*

*இந்தியாவின் சார்பில் Gukesh, Praggnanandhaa, Nihal Sarin, Hari Krishna, Koneru Humpy, Harika Dronavalli, Vaishali, Divya Deshmuk, Vantika Agrawal உட்பட 40-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*இந்தியா - இலங்கை இடையேயான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.*

***ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.***

***>>>>>><<<<<<***

***விஜய் அஸாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் மத்தியப்பிரதேச அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் தமிழக அணியை வென்றது.***

***>>>>>>END<<<<<<***